செ.வெ.எண். 52/மே **செய்தி வெளியீடு** நாள்: 31.05.2016

# கருணை அடிப்படையில் அலுவலக உதவியாளர் பணி நியமன ஆணையை 2 நபர்களுக்கு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.



தருமபுரி மாவட்டம், ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கருணை அடிப்படையில் ஊரக வளர்ச்சி பிரிவில் அலுவலக உதவியாளர் பணி நியமன ஆணையை 2 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ப.கங்காதர்,இ.கா.ப., ஆகியோர் இன்று (31.05.2016) வழங்கினார்கள்.

தருமபுரி மாவட்ட காவல் துறையில் இண்டூர், மகேந்திரமங்கலம் ஆகிய காவல் நிலையங்களில் தலைமை காவலராக பணியாற்றிய திரு. மு. நாகராஜ் மற்றும் திரு. கோவிந்தராஜ் ஆகியோர் பணியிலிருந்த போது மரணமடைந்ததால் அவர்களின் குடும்ப வாரிசுதாரர்களான திருமதி. மகேஸ்வரி மற்றும் திரு. ரேணுகாதேவி ஆகியோருக்கு ஊரக வளர்ச்சி பிரிவில் அலுவலக உதவியாளர் பணிக்கான நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ப.கங்காதர்,இ.கா.ப., ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு. ஜானகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. மாலதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திருமதி. எல். சித்ரா உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.